சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோட்டூர் எஸ்.பிரகாஷ் தலைமையில் பகுதி செயலாளர்கள் இரா. துரைராஜ் , எம்.கிருஷ்ணமூர்த்தி வட்டச் செயலாளர்கள் க.மணி, கோ.சண்முகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி , இளம் பேச்சாளர் சை.இம்ரான் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் துணை மு.மகேஷ்குமார், எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. உள்ளிட்ட நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் பகுதிச்செயலாளர் இரா.செந்தில்குமார் ஏற்பாட்டில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி, கழக இளம் பேச்சாளர் க.ஹேமநாதன், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.ஐடரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, தா.இளையஅருணா, பி.டி.பாண்டிசெல்வம், வ.பெ.சுரேஷ், மற்றும் கழக செயற்குழு, பொதுக்குழு, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு நடத்தும் சமுதாய வளைகாப்பு விழா

"கருவிலிருக்கும் சிசுக்கள் தமிழ்த்தாய் வாழ்த்துக் கேட்கும் பெருமைக்குரியவர்கள்!"

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. உரை

சென்னை,மார்ச்.26-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் எழும்பூர் தொகுதி, புரசைவாக்கம், கம்மவார் கல்யாண மஹாலில் நேற்று நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவினை நடத்திவைத்த கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், "தமிழ்நாடு அரசே நடத்தும் இவ்விழாவில் கலந்துகொள்ளும் கர்ப்பிணித் தாய்மார்களின் கருவிலிருக்கும் சிசுக்கள் தமிழ்த்தாய் வாழ்த்து கேட்கும் பெருமைக் குரியவர்கள்" எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், "சமுதாய வளைகாப்பு விழா, மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற பெண்களுக்கான சிறப்புத் திட்டங்களை மகளிர் மேன்மைக்காகத் திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிவருகிறார்கள். மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. இவை போன்ற பெண்களுக்கான தனித்த திட்டங்கள் நாட்டில் வேறெங்குமே இல்லை. இப்போதுதான் நம்மைப் பார்த்து வடமாநிலங்களில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை அமல்படுத்துகிறார்கள்.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருந்தால்தான் அவர்களின் எதிர்காலம் வளமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தான் சமுதாய வளைகாப்பு விழா நடத்தும் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்தார். கலைஞரின் வழியில் வந்த நம் முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். வசதி படைத்த கர்ப்பிணித் தாய்மார்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை எடுத்துக்கொண்டுவிடுவார்கள். ஆனால், ஏழை, எளிய, விளிம்பு நிலையில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து கிடைக்க வாய்ப்பில்லை என்பதைக் கருத்தில் கொண்டே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எத்தனையோ கட்சிகள் இருக்கலாம்; புதிதாக கட்சிகள் வரலாம், எனினும், கழக ஆட்சியில்தான் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. தமிழக அரசே உங்களுக்கு வளைகாப்பு நடத்துவது என்பதும், கருவில் இருக்கும் சிசுக்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைக் கேட்பது என்பதும் பெருமைக்குரிய விஷயம்.

பெண்கள் தங்கள் குடும்பத்தில் தனது தந்தையையோ, கணவரையோ, சகோதரரையோ ஹீரோவாகப் பார்க்கலாம். ஆனால், பொதுவாழ்வில் பெண்களின் உண்மையான ஹீரோ இருவர் மட்டுமே. ஒருவர் 1924ஆம் ஆண்டிலேயே பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை தேவை என்பதைத் தீர்மானமாக நிறைவேற்ற, அப்போதைய சனாதன தலைவர்கள் அங்கம் வகித்த காங்கிரஸ் கட்சியை வலியுறுத்திய போது, கட்சி மறுத்ததால் அக்கட்சியைவிட்டே வெளியேறிய தந்தை பெரியார் ஒரு ஹீரோ. அதேபோல, 1953 இல் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, மணவிலக்கு உள்ளிட்டவற்றைச் சட்டமாக்க முயன்று, அது முடியாததால் சட்டத்துறை அமைச்சர் என்ற பொறுப்பையே உதறித்தள்ளிவிட்டு வெளியேறிய அண்ணல் அம்பேத்கர் மற்றொரு ஹீரோ. இவர்கள் இருவரைத் தவிர வேறு எவரையும் ஹீரோவாக நீங்கள் பார்க்கத் தேவையில்லை.

பெரியாரும், அம்பேத்கரும் முயற்சித்த பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை என்பதை 1989இல் சட்டமாக நிறைவேற்றிக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை நிறைவேற்றிக் கொடுத்தவரும் கலைஞரே. ஆனால், மத்தியில் நம்மை ஆட்சி செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசோ, நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தைத் தேர்தல் ஆதாயத்திற்காக 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக நிறைவேற்றிவிட்டு, 2030ஆம் ஆண்டுதான் அச்சட்டம் அமலுக்கு வரும் என்று புருடா விட்டுக்கொண்டிருக்கிறது. இதன்மூலம் எந்த ஆட்சி, எந்தக் கட்சி பெண்களுக்கு முக்கியத்தும் கொடுக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனது தொகுதியைச் சேர்ந்த உங்களுக்கு என்ன தேவை இருந்தாலும், அதைத் தெரியப்படுத்த "நம்ம எக்மோர்" (Namma Egmore) என்கிற செயலி என்னால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் செயலியை உங்கள் போனில் பதிவிறக்கம் செய்து, உங்கள் குறைகள், கோரிக்கைகள் என அனைத்தையும் அதில் பதிவேற்றினால், நேரடியாக எனது கவனத்துக்கு வந்துவிடும்.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் ஆட்சி இந்த திராவிட மாடல் ஆட்சி. நீங்கள் கேட்காமலே யேதான் மகளிருக்கான எண்ணற்றத் திட்டங்களை எங்கள் தலைவர் கொண்டுவந்திருக்கி

பல்லாவரம் நகர மன்ற முன்னாள்

துணைத் தலைவர் வி.என்.சாமி மறைவு !

ஆர்.எஸ்.பாரதி-இ. கருணாநிதி,எஸ்.ஆர்.ராஜா அஞ்சலி!

சென்னை, மார்ச் 26

காஞ்சிபுரம் மாவட்டம், முன்னாள் பல்லாவரம் நகரமன்ற துணை தலைவரும், முன்னாள் செங்கை அண்ணா மாவட்ட பிரதிநிதியான கழக முன்னோடி வி.என்.சாமி அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து பம்மலில் உள்ள அவரது இல்லம் சென்று கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இதில் தலைமை தீர்மானகுழு செயலாளர் மீ.ஆ.வைத்தியலிங்கம், காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல். ஏ,தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல். ஏ,ஆர்.டி.அரசு,தாம்பரம் மாநகர அவைத் தலைவர் துணை மேயர் கோ. காமராஜ்,பம்மல் தெற்கு பகுதி செயலாளர் மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே. கருணாநிதி,பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மண்டலம் 2 குழுத் தலைவர் ஜோசப் அண்ணா துரை,செம்பாக்கம் வடக்கு பகுதி செயலாளர் ஏ. கே. கருணாகரன், கண்டோன்மெண்ட் நகர செயலாளர் டி.பாபு,பம்மல் தெற்கு பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர்,

பகுதி துணை செயலாளர் துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு,மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி. கி. ஆ. சத்தியபிரபு, வட்ட செயலாளர்கள் மு.இன்பசேகர் எம்.சி, அ.அனிஸ்டன்,என். காந்தி, எச்.முகமது அப்பாஸ்,மா.சுகுமாரன், அஸ்தினாபுரம் நாகராஜ்,செ.அமிர்தராஜ், மு.சதீஷ் குமார்,சீ.ஆகாஷ்,கு. அ கி ல ன் , எ ல் . எ ஸ் . ம ணி , மு.இ.சதீஷ் குமார் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னாள் பல்லாவரம் நகரமன்ற துணைத் தலைவரும்,முன்னாள் செங்கை அண்ணா மாவட்ட பிரதிநிதியான மறைந்த கழக முன்னோடி வி.என்.சாமி அவர்களின் உடலுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் தலைமை தீர்மானகுழு செயலாளர் மீ.ஆ.வைத்தியலிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ,ஆர்.டி.அரசு, துணை மேயர் கோ.காமராஜ்,பகுதி செயலாளர் பம்மல் வே.கருணாநிதி உள்ளிட்ட மாநில, மாவட்ட,பகுதி கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகரக் கழக திமுக சார்பில் கழகத் தலைவர் பிறந்தநாள் முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி நகர கழக செயலாளர் தி.வை.இரவி தலைமையில் நடைபெற்றது. இதில் கழக பேச்சாளர் வி. பி.ராஜன் நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி ஆகியோர் பொதுமக்களுக்கு விளையாட்டு வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க சிறப்புரையாற்றினார்கள். உடன் நகரக் கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் நகர் மன்ற உறுப்பினர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

காக்களூர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் கழக தலைவர் பிறந்த நாள் விழா:

திருவள்ளூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம் நல உதவிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு

திருவள்ளூர், மார்ச் 26;-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு பொது கூட்டம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா காக்களூரில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமை தாங்கினார். ஒன்றிய அவைத் தலைவர் பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், நிர்வாகிகள் கே.கே. சொக்கலிங்கம், கே.தரணி, எஸ்.சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே.சீனிவாசன், டி.எம்.ராமச்சந்திரன், எஸ்.ஜே.பரமேஸ்வரன், டி. தயாளன், ஏ.வரதன், வி.முரளி, வி.என்.சிற்றரசு, புட்லூர் ஜெயக்குமார், டி.கே.அசோக்குமார், ஆர். சண்முகம், டி. சதீஷ், வி.விக்கி, டி.குமார், எம்.கார்த்திக், ஆர்.ராஜேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்கள்

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ். சௌந்தரராஜன் மற்றும் நிர்வாகிகள் வி.தியாகராஜன், த.சுகுமார், டி.கே. பூவண்ணன், வி.ஜெய்சங்கர், ஏ.கே. சரவணன், எஸ்.வேலு தம்பி, ஏ.இயேசுபாலன், அரண் என். ஜனார்த்தனன், கே.ஜி. எட்டியப்பன், பி. பாஸ்கர், எம்.செந்தில்குமார், ஜி. சரவணன், எம்.கோவிந்தசாமி, எஸ். சிவப்பிரகாஷ், எம்.பி. பிரான்சிஸ் சேவியர், கதிரவன், எம். முருகன், டி.சீனு, ஆறுமுகம், எம்.சேதுபதி, ஆர்.தாமஸ், எஸ்.ரஜினி, சற்குணம், ஏ. கோவிந்தராஜ், வி.ஸ்ரீராமுலு, கே.கிருஷ்ணன், எஸ்.மேரி, டி. சிவா, பி. முருகன், பி. திவிகர், எஸ்.கார்த்திக், எஸ்.சரண்ராஜ் சூரி, எஸ்.மதன், குமார் பூவை எஸ்.கனகவல்லி, டி.கருணாகரன், மீராசா, ஜி.பரத், சி.ராஜி, டி.பாலாஜி, எஸ். என்.காசி ஆகியோர் வரவேற்றனர்கள்

இந்த நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் சா.மு.நாசர் பேசும்போது, உலகத்தில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு இருக்கிறது. தமிழையும் தமிழர்களையும் அழிக்க மோடி திட்டமிட்டு இருக்கிறார். தமிழர்களுக்கு இருமொழிக் கொள்கையே போதுமானது. தமிழர்களை ஒன்றிய பிரதமர் மோடி கிள்ளுக்கீரையாக நினைக்கிறார்.

கடந்த 196365 ல் மொழிப்போர் போராட்டம் நடைபெற்றது. அப்படி ஒரு போராட்டத்திற்கு மீண்டும் நம்மை தூண்டுவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதைசாதிக், கா.ராஜாராஜேஸ்வரி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாவட்ட துணைச் செயலாளர் காயத்ரிஸ்ரீதரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வி.ஜெ. உமாமகேஸ்வரி, ஜி.சி.சி.கருணாநிதி, ப.குமரேசன், ஜெயபுகழேந்தி, டி.லாசர், ஆ.திராவிடதேவன், எஸ்.மேகநாதன், வி.எஸ்.ஸ்ரீதர், எம்.அப்புன்ராஜ், சி.மோகன்தாஸ், கௌரிகஜேந்திரன், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எம். சக்திவேல், டி.உதயநிதி, ஏ.பி. பாலாஜி, டி.தியாகு சந்தர், இ.அருண்கீதன், பி.மணிகண்டன், ஜே.திவாகர், எஸ்.சரண்ராஜ், கே.ஆதித்யா, ஏ.மகாதேவி, டி.செந்தமிழ் செல்வி, எஸ்.சுபாஷினி, எஸ்.ப்ரீத்தா, பி.கிருபா, டி.வி. சரண்குமார், கே.சி.சதீஷ் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்கள் முடிவில் நிர்வாகிகள் பிரபு பி.பாலச்சந்தர், எஸ். என். கே. செல்விகுமார் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

ஆர்.உதயகுமார் தலைமை! தியாகராயர் நகர் மேற்குப் பகுதி இளைஞரணி சார்பில்

முதல்வர் பிறந்தநாள்: 133 அ வட்டத்தில் 572 பேருக்கு அறுசுவை உணவு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை,மார்ச்.26-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு பகுதி துணை அமைப்பாளர் ஆர். உதயகுமார் தலைமையில் 572 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி 133 அ வது வட்டத்தில் கீல்ட் தெருவில் இன்று (26.03.25 புதன்கிழமை) 12:30 மணியளவில் நடைபெறுகிறது.

மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., ராஜா அன்பழகன் எம்.சி,. வட்ட செயலாளர் பி.மாரி ,, மாவட்டதுணை அமைப்பாளர்கள் எஸ்.உமாசங்கர் எ.அஸ்வின் சி.பிரகாஷ் இளைஞரணி பகுதி அமைப்பாளர் ஆ.மணிரத்தினம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தினேஷ், மாணிக்கம், த.விக்னேஷ்வரன், வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தமிழச்சி தங்கப்பாண்டின் எம்.பி. ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு உணவு வழங்குகின்றனர்.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்ட திநகர் மேற்கு பகுதி திமுக இளைஞரணி 133அ. வட்டக் கழக அவைத் தலைவர் துக்காரம் தெரு எஸ். ஈஸ்வரன், வட்டத் துணைச் செயலாளர்கள் ஏ. பாலாஜி, சம்பா, மீனாட்சி சுந்தர், வட்டக் கழக பொருளாளர் ஏ.பி. விஜயராமன், பகுதி பிரதிநிதிகள் குழி வேல் , ஓம் செந்தில், டி.சரவணன், கார்த்திக், அமர்சந்த், அணிகளின் மாவட்ட அமைப்பாளர் கலை இலக்கிய. சண்முகநாதன், ஒட்டுனர் அணி தலைவர் இ. மூர்த்தி, மதியழகன் மாவட்ட (து)தலைவர் வர்த்தக அணி, மகளிர் அணி ஆ. உமாதேவி, தமிழ்ச்செல்வி, இளவரசி, இளைஞர் வட்டத்துணை அமைப்பாளர் கிஷோர், 133. அ. வட்டக் கழக செயல்வீரர்கள் தனசேகர், தங்கம், சரத், லோகேஷ், கணபதி, செல்வா, கிருஷ்ணா, ஆ.ராம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43வது வட்ட கழக சார்பாக கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் எல்லோருக்கும் எல்லாம் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் வட்ட செயலாளர் பொ.து.ராஜா தலைமையில் நடைபெற்றது.கழகச் செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா சிறப்புரையாற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் நலஉதவிகள் வழங்கினர்.இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், தர.இளையஅருணா, என்.மருதுகணேஷ், ந.மனோகரன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, வேதலட்சுமி, சதீஷ்குமார், வெ.சு.சத்தியநாராயணன், பிரேம்ஆனந்த், கதிரேசன், கஜேந்திரன், கோதண்டன், நாகராஜ், ப.குமார், தமிழ்ச்செல்வன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.